**கொலொன்ன பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 22 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கொலொன்ன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீள்நிரப்பு வருமானம் ரூபா 301,541 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சம்பள மீள்நிரப்புகை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வேறுபாட்டை இனங்கண்டேன். 2019 இறுதிக் கணக்கு தயாரிக்கையில் இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் உருப்பினர் படிகள் ரூபா 41,440 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய நடைமுறை சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | வேறுபாட்டை இனங்கண்டேன். 2019 இறுதிக் கணக்கு தயாரிக்கையில் இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | முன்னைய ஆண்டுக்கான கடன்படுனர் மிகை ஒதுக்கீட ரூபா 200,483 ஆனது. | மிகை ஒதுக்கீட்டிற்குரிய தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். | வேறுபாட்டை இனங்கண்டேன். 2019 இறுதிக் கணக்கு தயாரிக்கையில் இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் காசு மீதி ரூபா 187,934 மிகையாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணத்தை இனங்கண்டு சீர்செய்ய வேண்டும். | பல வருட காலமாக இவ் வேறுபாடு முன் கொண்டு வரப்பட்டுள்ளதால் அது தொடர்பாக கண்டறிந்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | மீளாய்வாண்டில் மிகை ரூபா 321,549 குறைத்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | குறைத்து செலவு வைக்கப்பட்டுள்ள பெறுமதியை திரண்ட | வேறுபாட்டை இனங்கண்டேன். 2019 இறுதிக் கணக்கு தயாரிக்கையில் இதனை சரிசெய்ய நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | நிதியத்திற்கு சீராக்க வேண்டும். | எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2002 முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 389,458 காலாவதியான வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்த்திருக்காமை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தொடர்புடைய வைப்புகளை எதிர் காலத்தில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 02 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் எரி பொருள் பாவனையினைப ரிசீலனை செய்ய வேண்டும். | அவ் வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனையை துரிதமாக மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,140,777 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,678,718 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 952,000 | 983,154 | 1,027,574 | 214,672 | 854,000 | 1,087,363 | 1,069,580 | 8,614 |
| (ii) | வாடகை | 4,404,814 | 4,435,691 | 4,255,369 | - | 4,568,080 | 3,649,074 | 3,644,855 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,032,900 | 1,076,893 | 1,076,893 | - | 726,900 | 958,004 | 958,004 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,753,225 | 9,643,820 | 10,713,656 | 8,905,259 | 6,703,125 | 7,936,659 | 5,137,308 | 10,429,825 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எலலையினுள் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களை முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக பெயரிட 2014 ஆண்டின் போது சபை ஏகமனதாக தீர்மானித்து உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தையும் பெற்றிருந்த போதும் 2018 ஆண்டில் அக் கிராமங்களை பிரசுரிப்பதற்காக சபை அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. முன்னேற்றமடைந்த கிராம பிரதேசங்களை இனங்கண்டிருந்த போதும், சபை அங்கீகாரம் கிடைக்காததனால் அப்பிரதேசங்களிலிருந்து சபைக்கு அறவிடக் கூடியதாக இருந்த வீத வரி வருமானம் இழக்கப்பட்டமை மற்றும் அதன் மூலம் அதிகார எல்லையில் மேற் கொள்ள முடியுமாக இருந்த அதிகார எல்லையின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நடவடிக்கைகளும் நின்றிருந்தது. | இனங்கண்டிருந்த முன்னேற்றமடைந்த கிராம பிரதேசங்களை வர்தமானி இடப்பட்டு வீத வரி அறவிடலுக்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக சபையின் ஒருமைபாட்டை வெளிப்படாமைனால் எதிர் நடவடிக்கை செய்வது பிரச்சினைக்குறியதாக உள்ளது. மீண்டும் சபையை அறிவூட்டி இந்த பிரதேசங்கள் முன்னேற்றம் அடைந்த பிரதேசங்களாக பெயரிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 நீர் கருத்திட்டங்களின் அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா | நிலுவை வருமானத்தை | நிலுவை தொகையை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 40,151 தொகை அறவிடுவதற்கு சபை இயலாமயிருந்தது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கிறேன். |
| (ஆ) | கொலைான்ன வாராந்த சந்தையிலிருந்து ரூபா 195,875 ஆன குத்தகை தொகையொன்று அறவிட வேண்டியதாக இருந்தது. | ஆறவிட முடியாத நிலுவை வருமானம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொலைான்ன வாராந்த சந்தை நிலுவை தொகை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளது. |

**2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் சபைக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 858,747 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 64,600 ஆனது. | சபைக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தாமதயின்றி அறவிட வேண்டும். | பேற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் மாகாண சபையினால் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 வருடாந்த பாதீட்டின் மூலம் அதிகார எல்லையில் பாதைகளை மேன்படுத்த மாகாண சபை, பரவலாக்கப்பட்ட மற்றும் சபை நிதியத்தினால் ரூபா 9.6 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், செயற்படுவதற்கு | வருடாந்த பாதீட்டின் மூலம் செய்யப்படும் ஏற்பாடுகளினூடாக செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் வருடாந்த செயல் | 2018 ஆண்டின் மாகாண சபை ஏற்பாடு கிடைக்கப் பெறல் மிக பழவீனமான நிலையில் இருந்ததுடன், மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஏற்பாடுகளும் எதுவும் கிடைக்கவில்லை. அதன் காரணமாக அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் எதனையும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினூடாக குறிப்பாக இனங்கண்டிருக்கவில்லை. | நடவடிக்கை திட்டத்தினுள் குறிப்பாக இனங்கண்டிருக்க வேண்டும். | செயற்பாடுகள் மற்றும் நீர் கருத்திட்டங்கள் போன்ற பல்வேறு பிரிவுகளுக்காக செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்ட எவ்வித அபிவிவருத்தி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் சபைக்கு இயலாமலிருந்தது. | முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டும். | உக்கலடையும் கழிவுப் பொருட்களால் இயற்கை பசளை உற்பத்தி செய்யும் நிலையமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்காக அதனுடன் தொடர்புடைய கருத்திட்ட அறிக்கை மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பகின்றன. எதிர்வரும் மாதத்தில் அவைகள் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் கழிவுப் பொருள் மத்திய நிலையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கின்றேன். அவ்வாறே கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையமொன்றை நிர்மானிக்க தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சபரகமுவ மாகாண பிரதான அமைச்சிற்கு அனுப்பப்படடுள்ளது. |

(இ) **சுற்றாடல் பிரச்சினை**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆபத்தான 278 பலாமரங்களை வெட்டி வீழ்த்த சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், அவற்றில் 130 பலாமரங்கள் உண்மையாகவே ஆபத்தானதா என உருதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆபத்தானது என உருதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மாத்திரமே குறித்த மரத்தை வெட்டி அகற்ற அங்கீகாரம் வழங்க வேண்டும். | எதிர் காலத்தில் அதிக பரிசீலனை மற்றும் கட்டுப்பாட்டுடன் ஆபத்தான மரங்களை அகற்றும் கட்டளையை வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | சபையினார் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த 65 பலாமரங்களில் 43 பலாமரங்களினால் எவ்வித ஆபத்தான நிலைமையும் இல்லாமல் பலகை பெற்றுக் கொள்ளும் நோக்கில் வெட்டப்பட்டுள்ளதாக கள பரிசோதனையின் போது உருதியானது. | ஆபத்தானது என உருதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மாத்திரமே குறித்த மரத்தை வெட்டி அகற்ற அங்கீகாரம் வழங்க வேண்டும். | எதிர் காலத்தில் அதிக பரிசீலனை மற்றும் கட்டுப்பாட்டுடன் ஆபத்தான மரங்களை அகற்றும் கட்டளையை வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 நிகழ்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 ஆண்டு இறுதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள தேவையான நீண்ட கால திட்டங்களை தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1998 ஆண்டில் சபை நிதியத்தினால் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 33,000 ஆன அங்கத்துவ படிகள் மற்றும் 1994 மே முதல் 1997 ஏப்ரல் வரையான காலப் பகுதியில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 50,310 ஆன தற்காலிக ஓய்வூதியத்தினையும் மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்த்துக் கொள்ள சபையிற்கு இயலாமலிருந்தது. | உரிய முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1994 ஆண்டின் போது கொலொன்ன பிரதேச சபையில் கடமையாற்றிய சுகாதார தொழிலாளி ஒருவருக்கு செலுத்தப்பட்ட தற்காலிக ஓய்வூதியமொன்றாகும். இது தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்திடம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், கிடைக்கும் ஆலோசனை பிரகாரம் முன் நடவடிக்கைகளை எடுக்கின்றேன். |

## 3.3 மனித வள முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணி விபரங்களின் பிரகாரம் 07 பதவிகளுக்குரிய 09 | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், சேவை | குறித்த பதவிகள் இது வரையும் வெற்றிடமாக நிலவுகின்றன. நிறுவனத்தின் சேவை தேவைப்பாடு மீது சாரதி, |

| | | |
|---|---|---|
| வெற்றிடங்கள் இருந்ததுடன், சாரதி மற்றும் நூலக உதவியாளர் பதவிகளுக்காக சேவை ஒப்பந்தம் மீது மூவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | தேவைபாட்டின் மீது சேர்த்துக் கொள்ளப்பட்ட பதவிகளை முறையாக்கிக் கொள்ள வேண்டும். | உதவியாளர் பதவிகளுக்காக சேவை ஒப்பந்தம் மீது மூவர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி மிகையாக உள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமமான 37 சுடுகாடுகளிற்கான காணிகளின் உரித்துரிமையை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமைய தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுடுகாடுகளாக இனங்காணப்பட்ட 37 காணிகள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டுளன. அக் காணிகளை சட்ட பூர்வமாக சுவீகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | விஜேரிய கடைசந்தையில் காணி துண்டொன்றின் உரிமையை தீர்த்துக்கொள்ள மீளாய்வாண்டு இறுதி வரையும் இயலாமல் இருந்தது. | காணிகளின் உரிமையை தீர்த்துக் கொள்ள வேண்டும். | குறித்த காணித் துண்டை சட்ட ரீதியாக சுவீகருத்து தருமாறு கொலொன்ன பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டடுள்ளது. |

#### 3.4.2 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 3,904,050 பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் இயந்திரமொன்றையும் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். | உரிய வாகனங்கள் மற்றும் வைப்றேட் இயந்திரம் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.4.3 வாகனங்களை உபயோகித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பழுதுபார்க்கப்படாததனால் 2014 மார்ச் முதல் 2015 நவம்பர் வரை | சபைக்கு சொந்தமான | டெக்டரை ஓட்டத்தில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த டெக்டர் ஒன்று 2015 ஆண்டில் ரூபா 52,570 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்த போதும், சாரதியொருவர் இல்லாததனால் மீளாய்வாண்டு இறுதி வரையும் ஓட்டத்திற்கு ஈடுபடுத்தியிருக்கவில்லை. | சொத்துக்களை பயனுள்ளதாக உபயோகிக்க வேண்டும். | எடுப்பதாக அறியத்தருகிறேன். |

**3.5 பெறுகைகள்**

3.5.1 **பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 966,562 ஆன பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | 2018 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத போதும், குறித்த போருட்கள் மற்றும் உபகரணங்களை சபை தீர்மானம் மீது விலை மனு கோரப்பட்டு சட்டரீதியாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. 2019 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.5.2 **ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 948,250 ஆன குகுலு வாவி வயல்வெளி அணைக்கட்டை அபிவிருத்தி செய்யும் வேலையின் 05 வேலை விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக கூட்டுத் தொகை ரூபா 48,729 செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக செலுத்துகை அறவிடப்பட வேண்டும். | மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 48,729 தொகையினை நிறுத்தல் பணத்திலிருந்து குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | செலவினம் ரூபா 830,419 ஆன தொம்பகஹ அணைக்கட்டு அபிவிருத்தி செயற்பாடு 2018 செப்தெம்பர் 21 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், நீரோடை வாயில் அணைக்கட்டின் மட்டத்தைவிட உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன் காரணமாக பணிகள் பூர்த்தி | வேலையின் அதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனை பெற்றுக் கொள்ள எஞ்சியுள்ள வேலைகளை பூர்த்தி செய்யவும் மேலதிக கொடுப்பனவை அறவிடவும் | கிடைக்கப் பெற்ற ஒதுக்கீட்டின் மீது வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மீதி ஒதுக்கீடு கோரப்பட்ட போதும், இது வரையும் அங்கீகரிக்கப்படவில்லை. அவ்வாறே வேலைக்காக உண்மையிலேயே ரூபா 6,912 மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டுவதுடன் அப்பணத்தை ஒப்பந்தக்காரரின் நிறுத்தற் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த அணைக்கட்டிலிருந்து பிரயோசனத்தை பெற்றுக் கொள்ள முடியாமலிருந்தது. அவ்வாறே இவ் வேலைகளிற்காக 182 கிலோ கிராம் கம்பகளிற்கு ரூபா 39,020 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் காரணமாக வருடாந்த பாதீடை நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்த சபைக்கு இயலாமலிருந்தது

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 19 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 10,223,000 ஆன மொத்த ஒதுக்கீடும் சேமிப்பாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்வதற்கும், அவ் ஒதுக்கீடுகளை பயனுள்ளதாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீட்டினால் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் அவ் வேலை விடயங்களின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாவில்லை. ஆகவே எதிர்வரும் ஆண்டில் பாதீடு தயாரிக்கும் செயற்பாடு நடைபெறும் போது இது தொடர்பாக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 28 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 27,524,964 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 40 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிப்பு இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்வதற்கும், அவ் ஒதுக்கீடுகளை பயனுள்ளதாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகத்தின் பல்வேறு செலவினங்கள் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு பாதீட்டினூடாக ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்படுவதுடன், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வேலைகளிற்காக பணம் செலுத்துகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட செலவின விடயங்களில் சேமிப்பு காட்டப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டிற்குரிய பாதீடு தயாரிக்கப்படும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். |